**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| **வழக்கு எண்** | OP | 44 | of | 2019 |

**2028-ம் ஆண்டு ஜுன் திங்கள் 17 ம் நாளான இன்று**

**வாதி/பிரதிவாதி மனுதாரர்/எதிர்மனுதாரர்** **தரப்பில் ம.சா. 1-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.பிரபாகரன் என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **சின்ராஜ்** | **தந்தை பெயர்** | |
| **கிராமம்** | | **கணவர் பெயர்** | |
| **ஜாதி** | | **தாலுக்கா** | |
| | | **சமயம்** | |
| **தொழில்** | | **வயது** | |

**நாள்-17.06.2026**

**ம.சா.-3**

**குறுக்கு விசாரணை-**

விபத்து சம்மந்தமாக நான் புகார் தரவில்லை. காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தார் என்று தெரியாது. குற்றவியல் வழக்கில் நான் சாட்சி இல்லை. குற்றவியல் வழக்கில் போலீசார் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் எதிலும் நான் கையொப்பம் இடவில்லை. விபத்தை நான் எவ்வளவு துாரத்தில் நின்று பார்த்தேன் என்று என் முதல் விசாரணையில் சொல்லவில்லை. விபத்து நடப்பதற்கு முன்பு சம்மந்தப்பட்ட இரண்டு வாகனங்களையும் எவ்வளவு நேரம் பார்த்தேன் என்று என் முதல் விசாரணையில் சொல்லவில்லை. இறந்த நபர் தலைகவசம் அணிந்திருந்தாரா என்று நான் என் முதல்

விசாரணையில் சொல்லவில்லை. நம் நாட்டின் குடியரசு தினம் என்றைக்கு என்று தற்போது ஞாபகமில்லை. ஆனால் விபத்து நடந்த தேதி நன்றாக ஞாபகம் உள்ளது. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. கருணாகரன் என்ற என் நண்பர் திருக்கழுக்குன்றத்தில் உள்ளார் என்பதை காட்ட ஆவண ஆதாரம் தாக்கல் செய்யவில்லை. நான் விபத்தை பார்க்கவில்லை என்றும், மனுதாரருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை -இல்லை.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu